


திருவையாற்றில் தஞ்சை மத்திய மாவட்ட தி.மு.க மற்றும் திருவையாறு சட்டமன்ற தொகுதி தி.மு.க. சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 103வது பிறந்தநாள் மற்றும் வாக்களித்த வாக்காளர்களுக்கு நன்றி அறிவித்தல் பொதுக்கூட்டத்தில் கழக தேர்தல் பணிக்குழு செயலாளர் கம்பம் பெ.செல்வேந்திரன் சிறப்புரையாற்றினார். உடன் மாவட்டக் கழகச் செயலாளர் துரை.சந்திரசேகரன் எம்.எல்.ஏ, முன்னாள் ஒன்றிய மாநில அமைச்சர்கள் எஸ்.எஸ்.பழநிமாணிக்கம், கோவி.செழியன், ஆர்.வைத்தியலிங்கம், ச.முரசொலி எம்.பி, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் எம்.இராமசந்திரன், டி.கே.ஜி.நீலமேகம், எம்.ரெங்கசாமி, தலைமைச் செயற்குழு உறுப்பினர் து. செல்வம், சி.ராஜேந்திரன், மாநகரச் செயலாளர் சண்.இராமநாதன், தஞ்சை மேயர் அஞ்சுகம் பூபதி , ஒன்றிய செயலாளர் வை.சிவசங்கரன், பேரூர் செயலாளர் சி.நாகராஜன் உள்ளிட்ட ஒன்றிய, பகுதி, பேரூர் கழக செயலாளர். நிர்வாகிகள், கழக முன்னோடிகள் பங்கேற்றனர்.

## திருப்பூர் மத்திய பேருந்து நிலையம்

# ‘குடி’ மகன்களின் கூடாரமாக மாறிய அவலநிலை!

## பயணிகள் கடும் சிரமத்திற்கு ஆளாகி வருகின்றனர்!

திருப்பூர், ஜூலை 8 -

திருப்பூர் கலைஞர் மத்திய பேருந்து நிலையத்தில் மது அருந்தி விட்டு குடிமகன்கள்படுத்துகிடப்பதால் பொதுமக்கள் கடும் அவதிக்குள்ளாகி வருகின்றனர்.

திருப்பூர் பகுதியில் பின்னலாடை தொழில்கள் மற்றும் அதனை சார்ந்த தொழில்களான டையிங், நிட்டிங், காம்பேக்டிங், வாசிங், விசைத்தறி உள்ளிட்ட தொழில்களும் மற்றும் உடுமலை பகுதியில் விவசாயம் போன்ற பல்வேறு தொழில்கள் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. இந்த தொழில்களில் தமிழகம் முழுவதும் பல்வேறு மாவட்டங்களிலிருந்து தொழிலாளர்கள் பணியாற்றி வருகிறார்கள்.

திருப்பூரில் பழைய, புதிய பேருந்து நிலையத்தை ஸ்மார்ட் சிட்டி திட்டத்தின் கீழ் பல கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதுப்பிக்கப்பட்டு மாமன்ற கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு பழைய பேருந்து நிலையத்தை கலைஞர் கருணாநிதி பேருந்து நிலையம் எனபெயர் மாற்றம் செய்து அதனை எந்நாளும் நம் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் காணொலி மூலம் திறந்து வைத்தார்.

இந்நிலையில் இந்த பேருந்து நிலையத்தில் தற்போது உரிய பராமரிப்புகள் இல்லாமல் படிக்கட்டுகளின் கம்பிகள் உடைந்தும், சுகாதாரம் பேணப்படாமலும் காணப்படுகிறது. அதே போல் பேருந்து நிலையத்தின் பல்வேறு பகுதிகளில் குடிமகன்கள் மது அருந்திவிட்டு ஆங்காங்கே நடைபாதையில் படுத்து தூங்குகின்றனர். அது மட்டுமல்லாமல் அந்த வழியாக நடந்து செல்லும் பெண்கள் மற்றும் பயணிகளை கேலி செய்வது, போதையில் தகராறு செய்வது போன்ற செயல்களிலும் ஈடுபடுகின்றனர். இதனால் பேருந்து நிலையத்திற்கு வரும் பொதுமக்கள் எந்த நேரமும் அச்சத்துடன் வந்து செல்லக்கூடிய நிலை ஏற்பட்டுள்ளது.

இது குறித்து பொதுமக்கள் கூறியதாவது : கடந்த தி.மு.க. ஆட்சியில் ஸ்மார்ட் சிட்டி திட்டத்தின் கீழ் பல கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதுப்பிக்கப்பட்ட பழைய பேருந்து நிலையத்தை கலைஞர் கருணாநிதி பேருந்து நிலையம் எனபெயர் மாற்றம் செய்து அதனை அன்றைய முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் காணொலி மூலம் திறக்கப்பட்டு சுகாதாரமான நிலையில் இருந்தது.

தற்போது குடிமகன்களின் தொல்லையால் பேருந்து நிலையத்திற்கு வரவே அச்சப்படக்கூடிய சூழல் ஏற்பட்டுள்ளது. பேருந்து நிலையத்தில் ஆங்காங்கே படுத்து கிடக்கும் குடிமகன்களை அப்புறப்படுத்தி பொதுமக்கள் பாதுகாப்பிற்கு காவல்துறையினர் வழிவகை செய்ய வேண்டும்.

அதேபோல் பேருந்து நிலையங்களில் பல்வேறு இடங்களில் கம்பிகள் உடைந்தும், குப்பைகளாகவும் காணப்படுகிறது. மாநகராட்சி நிர்வாகம் உடனடியாக தலையீடு செய்து புதிதாக கட்டப்பட்ட பேருந்து நிலையத்தில் படிக்கட்டு கம்பிகளை சரி செய்தும் சுகாதார பணிகளை மேற்கொள்ள வேண்டும் என்று பொதுமக்கள் கூறினர்.

## நெம்மேலியில் கடல் நீரை குடிநீராக்கும் நிலையத்தை முதல்வராக இருந்த மு.க,ஸ்டாலின் தொடங்கி வைத்தபோது

# கம்பீரமாக அமைக்கப்பட்ட பிரம்மாண்ட கல்வெட்டை அகற்றிய த.வெ.க. அரசுக்கு கடும் கண்டனம்!

## ஒருவாரத்திற்குள் மீண்டும் அமைக்காவிட்டால் போராட்டம்!

## முன்னாள் அமைச்சர் தா.மோ.அன்பரசன் ஆவேசம்!






முன்னாள் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைத்த போது எடுத்த படம்.






த.வெ.க. அரசு கல்வெட்டை அகற்றிய போது எடுத்த படம்.

**சென்னை,ஜூலை 8 -**

**நெம்மேலியில் ரூ.1516.82 கோடி மதிப்பீட்டில் நாள் 1-க்கு 150 மில்லியன் லிட்டர் உற்பத்தி திறன் கொண்ட 2-வது கடல் நீரைக் குடிநீராக்கும் திட்டத்தை அப்போது முதல்வராக இருந்த தளபதி மு.க. ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைத்த போது, கம்பீரமாக அமைக்கப்பட்ட பிரம்மாண்ட கல்வெட்டில் திறந்து வைத்தவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் பெயர் இருந்ததால் அக்கல்வெட்டை அகற்றப்பட்டதற்கு கடும் கண்டனத்தை தெரிவித்துக் கொள்வதோடு, ஒருவாரத்திற்குள் மீண்டும் அக்கல்வெட்டை அமைக்காவிட்டால் மாவட்ட தி.மு.க. சார்பில் மாபெரும் போராட்டம் நடத்துவோம் என்று முன்னாள் அமைச்சர் - காஞ்சிபுரம் வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர் தா.மோ. அன்பரசன் ஆவேசத்துடன் பேட்டியளித்துள்ளார்.**

சென்னை அண்ணா அறிவாலயத்தில் நிருபர்களுக்கு அவர் அளித்த பேட்டி வருமாறு:-

சென்னை மாநகரின் குடிநீர்த் தேவையை தீர்ப்பதற்காக கடந்த 2006 - 2011-ஆம் ஆண்டு கலைஞர் ஆட்சியில், மாமல்லபுரத்தை அடுத்த நெம்மேலியில் நாள் ஒன்றுக்கு 100 மில்லியன் லிட்டர் உற்பத்தி திறன் கொண்ட கடல் நீரை குடிநீராக்கும் நிலையம் அமைப்பதற்கான திட்டப் பணிகளை அன்றைய துணை முதல் அமைச்சராக இருந்த தளபதி மு.க.ஸ்டாலின் அவர்கள் 23-2-2010 அன்று அடிக்கல் நாட்டினார்.

**9 லட்சம் மக்கள் பயன்பெறுகின்றனர்!**

பின்னர் அந்த திட்டப் பணிகள் அ.தி.மு.க. ஆட்சியில் செயல்பாட்டுக்கு வந்தது. தளபதி மு.க. ஸ்டாலின் அவர்களால் கொண்டு வரப்பட்ட இந்த திட்டத்தின் மூலம் சோழிங்கநல்லூர், நீலாங்கரை - ஈஞ்சம்பாக்கம், காரப்பாக்கம், செம்மஞ்சேரி, துரைப்பாக்கம், பெருங்குடி, கொட்டிவாக்கம், பாலவாக்கம், திருவான்மியூர், வேளச்சேரி, தரமணி, பள்ளிப்பட்டு, அடையாறு, பெசன்ட் நகர், நந்தனம், எம்.ஆர்.சி.நகர், மயிலாப்பூர், ராஜா அண்ணாமலைபுரம் ஆகிய பகுதிகளில் வசிக்கும் சுமார் 9 லட்சம் பொதுமக்கள் பயன்பெற்று வருகின்றனர்.

அதன்பின்னர் 2021-ஆம் ஆண்டு தமிழ்நாட்டின் முதல் அமைச்சராக தளபதி மு.க. ஸ்டாலின் அவர்கள் பொறுப்பேற்ற பின்னர், பெருகி வரும் மக்கள் தொகையையும், விரிந்து வரும் சென்னை மாநகராட்சியின் பரப்பளவையும்கருத்தில் கொண்டு புதிய குடிநீர் திட்டத்தைநிறைவேற்றி, நெம்மேலியில் ரூ.1516.82 கோடி மதிப்பீட்டில் நாள் ஒன்றுக்கு 150 மில்லியன் லிட்டர் உற்பத்தி திறன் கொண்ட இரண்டாவது கடல் நீரைக் குடிநீராக்கும் நிலையத்தை நாட்டு மக்களுடைய பயன்பாட்டிற்காக, கடந்த 24-2-2024 அன்று முதல்வராக இருந்த தளபதி மு.க.ஸ்டாலின் அவர்கள் நெம்மேலிக்கு நேரில் வந்து இந்த திட்டத்தை தொடங்கி வைத்தார்.

இந்த நிலையத்தில் இருந்து பெறப்படுகின்ற குடிநீர் மூலம் தென்சென்னை பகுதியில் அடங்கி உள்ள ஆலந்தூர், மூவரசம்பட்டு, வேளச்சேரி, புனிததோமையர்மலை, மேடவாக்கம், பல்லாவரம், சோழிங்க நல்லூர், கீழ்கட்டளை, உள்ளகரம், புழுதிவாக் கம், மடிப்பாக்கம், கோவிலம்பாக்கம், நன்மங்கலம் ஆகிய பகுதிகளில் உள்ள 9 லட்சம் மக்கள் பயன் பெறும் வகையில் இந்த திட்டம் மிகச்சிறப்பான வகையில் செயல்பட்டு வருகிறது.

இந்த திட்டம் தொடங்கப்பட்ட போது கடந்த 24-2-2024 அன்று முதல்வராக இருந்த மு.க.ஸ்டாலின் அவர்கள் நெம்மேலியில் இ.சி.ஆர். சாலையை யொட்டி பெரிய கல்வெட்டை திறந்து வைத்தார்.

இந்த நிலையில் ஆட்சிமாற்றம் ஏற்பட்டு புதிய முதல்வராக பொறுப்பேற்றுள்ள விஜய் இன்று நெம்மேலியில் உள்ள கடல்நீரைக் குடிநீராக்கும் திட்டத்தின் செயல்பாடு களை பார்வையிட வருகை தருகிறார்.

முதல் - அமைச்சர் விஜய் நெம்மேலிக்கு வருகிறார் என்கிற ஒரே காரணத்திற்காக நெம்மேலி கடல் நீரை குடிநீராக்கும் ஆலைக்கு முன்பு கம்பீரமாக அமைக்கப்பட்டிருந்த மிகப்பெரிய கல்வெட்டு அகற்றப்பட்டுள்ளது.

**ரீல்ஸ் ஆட்சி!**

நெம்மேலியில் ரூ.1516.82 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள கடல் நீரை குடிநீராக்கும் நிலையத்தை 24-2-2024 அன்று தமிழ்நாடு முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டது என்று பொறிக்கப்பட்டிருந்த அப்பெரிய கல்வெட்டு எழுத்துக்களை முற்றிலும் இரவோடு இரவாக அகற்றப்பட்டுள்ளது. இந்த அராஜகச் செயலை மாவட்ட தி.மு.க. சார்பில் வன்மையாக கண்டிக்கிறோம்.

விஜய் முதல்வராக பொறுப்பேற்று 50 நாட்களாக ஆகியும் தமிழ்நாட்டில் உள்ள மக்களுக்காக எந்த ஒரு புதிய திட்டத்தையும் செயல்படுத்தாமல் திணறித்திணறி திறமையற்ற ஆட்சியை நடத்தி வருகிறார்.

மாறாக திராவிட மாடல் ஆட்சியில் கொண்டு வரப்பட்ட திட்டங்களை மட்டும் செயல்படுத்தி வருகிறார். அப்படி செயல்படுத்தும் திட்டங்களை தம்முடைய அரசு செயல்படுத்துவதாக ஸ்டிக்கர் ஒட்டி ரீல்ஸ் ஆட்சியை நடத்தி வருகிறார்.

தமிழ்நாட்டில் உள்ள இளைஞர்களின் திறன் மேம்பாட்டிற்காக திராவிட மாடல் ஆட்சியில் நான் முதல்வன் தொடங்கப்பட்ட அற்புத் திட்டத்தால் இதுவரை 41 லட்சம் மாணவர்கள் மற்றும் இளைஞர்கள் பயன் பெற்றுள்ளார்.

இந்த திட்டம் த.வெ.க. தற்குறி ஆட்சியில் திறன் தமிழ்நாடு எனப் பெயர் மாற்றம் செய்துள்ளனர்.

அதைத் தொடர்ந்து முதல்வர் படைப்பகம் என்ற திட்டத்தின் பெயரில் உள்ள முதல்வர் என்ற பெயரை மட்டும் இந்த அற்ப ஆட்சியில் நீக்கம் செய்துள்ளனர்.

இந்த இரண்டு திட்டங்களில் இருந்த முதல்வர் என்ற பெயரை மட்டும் நீக்கிய இந்த ஆணவ ஆட்சியினர் இன்றைக்கு நெம்மேலியில் கடல் நீரை குடிநீராக்கும் திட்டத் தொடங்கி வைத்த முதல்வர் மு.க.ஸ்டாலின் என்று பெயர் பொறிக்கப்பட்டிருந்த கல்வெட்டை அகற்றி இருப்பது ஆட்சியாளர்களின் ஆணவத்தின் உச்சமாகும்.

சீப்பை ஒளித்து வைத்தால் திருமணம் நின்று விடுமா? என்பது பிரபலமான தமிழ் பழமொழி ஆகும்.

நெம்மேலியில் மு.க.ஸ்டாலின் பெயர் பொறிக்கப்பட்ட கல்வெட்டை இன்றைக்கு அகற்றி இருக்கலாம்.

ஆனால் திராவிட மாடல் ஆட்சியில் முதல்வராக இருந்த மு.க. ஸ்டாலின் அவர்களின் பெயரை மக்கள் மனதில் இருந்து நீக்க முடியாது.

மகளிர் உரிமைத்திட்டம் - மகளிர் விடியல் பயண திட்டம் இருக்கும் வரை இந்த தமிழ்நாட்டை இன்றைக்கும் மக்கள் மனங்களில் முதல்வராக இருந்து தமிழ்நாட்டை ஆள்பவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தான் என்பதை யாராலும் மறைக்க முடியாது.

நெம்மேலியில் அகற்றப்பட்ட அக்கல்வெட்டை ஒருவாரத்திற்குள் அமைத்து விடுவோம் என குடிநீர் வடிகால் வாரிய அலுவலர்கள் என்னிடம் உறுதியளித்துள்ளனர்.

அநியாயமாக அகற்றப்பட்ட அக்கல்வெட்டை பழைய வடிவத்தில் ஒருவாரத்திற்குள் அமைக்காவிட்டால் மாவட்ட தி.மு.க. சார்பில் பொதுமக்களையும் - கழகத்தினரையும் பெருங்கூட்டமாக திரட்டி மாபெரும் போராட்டம் நடத்தப் படும் என்று எச்சரிக்கிறேன்.

இவ்வாறு முன்னாள் அமைச்சர் தா.மோ.அன்பரசன் கூறியுள்ளார்.

## திருப்பத்தூரில் கலைஞர் பிறந்த நாள் பொதுக் கூட்டம்!

# த.வெ.க. ஆட்சி நீடித்தால் தமிழக உரிமைகள் பாதிக்கப்படும்!

## முன்னாள் அமைச்சர் மு.தென்னவன் பேச்சு!

சிவகங்கை, ஜூலை 8 –

சிவகங்கை மாவட்டம் திருப்பத்தூரில் ஒன்றிய பேரூர் கழகத்தின் சார்பில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் 103 வது பிறந்தநாள் விழா வாக்காளர்களுக்கு நன்றி தெரிவிக்கும் பொதுக்கூட்டம் மாவட்ட கழகச் செயலாளர், முன்னாள் அமைச்சர் கே. ஆர். பெரியகருப்பன் தலைமையில் நடைபெற்றது. மாவட்ட அவைத்தலைவர் வழக்கறிஞர். அ.கணேசன், புலவர் சே.செவந்தியப்பன், மாவட்ட துணை செயலாளர் த. சேங்கைமாறன் வடக்கு ஒன்றிய செயலாளர் வி.ராமதி மாணிக்கம், திருப்பத்தூர் பேரூராட்சி மன்ற தலைவர் திருமதி கோகிலா ராணி நாராயணன் ,பேரூர் கழக செயலாளர் கள் கே.பி. எஸ்.பழனியப்பன் ,கார்த்திகேயன் பேரூராட்சி துணை தலைவர்கான்முகமது ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. திருப்பத் தூர் தெற்கு ஒன்றிய செயலாளர் சோ.சண்முகவடி வேல் வரவேற்றுப் பேசினார்.

இந்த கூட்டத்தில் கலந்து கொண்டு முன்னாள் அமைச்சர் இலக்கிய அணி புரவலர் மு.தென்னவன் பேசியதாவது: த.வெ.க. வெற்றி என்பது நாம் அனைவரும் எதிர் பார்க்காத வெற்றியாகும். இத்தேர்தலில் திருப்பத்தூர் தொகுதியில் நம்முடைய முன்னாள் அமைச்சர் தோற்கடிக்கப்பட்டார் என்பது கேள்விக்குறியாக உள்ளது. இன்று அ.தி. மு.கவினர் தோல்வியுற்றதும் சாரை சாரையாக த.வெ.க.விற்கு போய் சேர்கிறார்கள் இவர்களுக்கெல்லாம் சூடு,சொரணை உள்ளதா என்று தெரியவில்லை. இன்று நடைபெறும் த.வெ.க ஆட்சி நம்முடைய ஆதரவில் வெற்றி பெற்ற கூட்டணி கட்சிகளின் ஆதரவை வைத்து தான் இந்த ஆட்சி நடைபெறுகிறது. அ.தி. மு.க. ஒன்றும் தீண்டத்தகாத கட்சி கிடையாது.

அ.தி.மு.க.வுடன் காங்கிரஸ் , விடுதலை சிறுத்தைகள், இந்திய கம்யூனிஸ்ட் மூஸ்லீம்லீக் ஆகியவைகள் அதிமுகவுடன் கூட்டணி வைத்திருந்தார்கள். இந்த வெற்றியை புரிந்து கொள்ளாத இந்திய யூனியன் முஸ்லிம் லீக் அமைச்சர் தி.மு.க தூக்கி எறியப்பட வேண்டும் என்று பேசியுள்ளார். அது அவரது அறியாமையை காட்டுகிறது. தலைவர் கலைஞர், தளபதி மு.க.ஸ்டாலின் ஆகியோர் சிறுபான்மையின மக்களை பாதுகாத்து வந்தவர்கள் . அவர்களின் உரிமைகளை பெற்று தந்தவர்கள். தலைவர் கலைஞர் முதல்வர் தளபதி ஆவார்கள் இதை அந்த முஸ்லிம் கட்சியை சேர்ந்த அமைச்சர் புரிந்து கொள்ளவில்லை.

த.வெ.க.ஆட்சி தொடர்ந்தால் தமிழகத்தில் சிறுபான்மை இன மக்கள் நலன்கள் பாதிக்கப்படும். கல்வியில் மும் மொழிக் கொள்கை புகு த் தப்படும். தமிழகத்தின் வளர்ச்சி பாதிக்கப்படும் . தமிழகத்தில் மதச் சார்பின்மை சிறு பான்மையின மக்களை பாதுகாக்கும் இயக்கமாக தி. மு.க .உள்ளது த.வெ. க.ஆட்சி வந்தால் இத்தகைய உரிமைகளில் பாதிப்புகள் ஏற்படும் மக்கள் ஒன்றும் நம்மை புறக்கணிக்க வில்லை. மாற்றம் வேண்டும் என்று நம்பி வாக்களித்தார்கள் . ஆனால் இன்று அவர்கள் ஏமாற்றம் அடைந்துள்ளார்கள். இது ஒரு தற்காலிக வெற்றி தான் .விரைவில் தமிழகத்தில் தேர்தல் நடைபெற உள்ளது. இதில் மீண்டும் கழகம்வெற்றி பெறும். முதல்வர் தளபதி ஸ்டாலின் தலைமையில் ஆட்சி அமைய உள்ளது. இவ்வாறு முன்னாள் அமைச்சர் மு.தென்னவன் பேசினார்.

கே.ஆர்.பெரியகருப்பன் கூட்டத்திற்கு தலைமை வகித்த முன்னாள் அமைச்சர் சிவகங்கை மாவட்ட கழகச் செயலாளர் கே.ஆர்.பெரியகருப்பன் பேசியதாவது: தமிழகத்தில் தி.மு.கவை பேரறிஞர் அண்ணா ஆட்சிக்காக துவக்க வில்லை. தமிழக மக்களை பாதுகாக்கவும், தமிழ்நாட்டை பாதுகாக்கவும், தமிழகத்தின் வளர்ச்சி முன்னேற்றத்திற்காகவும் திராவிட இயக்கத்தை தோற்றுவித்தார். இதில் ஐந்தாண்டுகளுக்கு பிறகு தேர்தலில் போட்டியிட வேண்டும். ஆட்சியில் இருந்தால்தான் மக்களின் தேவைகளை நிறைவேற்ற முடியும் என்று பெரும்பாலான கழகத்தினர் கோரிக்கையை ஏற்று கழகம் ஆட்சி அமைத்தது .67ல் பெரும்பான்மை இடங்களில் வெற்றி பெற்றது. 69 இல் பேரறிஞர் அண்ணா நம்மை விட்டு மறைந்தார். அப்பொழுது கழகம் இத்துடன் அழியும் என்று பலர் நினைத்தார்கள் ஆனால் கழகத் தலைவர் முத்தமிழறிஞர் கலைஞர் தலைமையில் கழகம் பல்வேறு சாதனைகளை படைத்தது.

கழகத் தலைவர் கலைஞர் அவர்கள் ஐந்து முறை முதல்வராக இருந்து எண்ணற்ற மக்கள் நலத் திட்டங்களை செயல்படுத்தினார் .அவரது திட்டங்களை மற்ற மாநிலங்கள் இந்தியாவே பின் படுத்தி செயல்படுத்தியது . தலைவர் கலைஞர் சுயம்புவாக உருவானவர் . பொது வாழ்க்கையில் 50 ஆண்டுகள் அவர் செய்த சாதனைகளை இந்தியாவிலேயே எந்த ஒரு மாநில கட்சி தலைவரும் செய்ததில்லை. தமிழகத்தை வெற்றி பாதைக்கு அழைத்துச் சென்றவர் தலைவர் கலைஞர் ஆவார்கள்.கழகம் இப்போது ஒரு ஜனநாயக சிறப்புமிக்க பேரி யக்கமாக செயல்பட்டு வருகிறது. சமுதாய மக்கள் இயக்கமாகவும் அனைத்து மக்களையும் பாதுகாக்கும் இயக்கமாக கழகம் தலைவர் தளபதி தலைமையில் விளங்கி வருகிறது. .தலைவர் கலைஞர் வழியில் கழக தலைவர் தளபதி அவர்களும் கழகத்தை வழி நடத்தி வருகிறார். இதற்கென்று தனியான கொள்கைகள் உள்ளது. கொள்கைகள் மாறாமல் இந்த இயக்கம் இன்று வரை ஜனநாயகத்துடன் செயல்பட்டு வருகிறது. திராவிட மாடல் ஐந்தாண்டு கால ஆட்சிகளை இன்று ஸ்டிக்கர் ஒட்டி த.வெ.க அரசு செயல் படுத்தி வருகிறது. கழகத் தலைவர் தளபதி அவர்கள் முதல்வராக இருந்த காலத்தில் ஒவ்வொரு திட்டங்களையும் சிந்தித்து சிந்தித்து செயல்படுத்தி அதை நிறைவேற்றினார். 20 மணி நேரம் மக்களுக்காக உழைத்தார் .நேற்று பெய்த மழையில் இன்று முளைத்த தலைவர் கிடையாது . மற்ற மாநிலங்களில் தளபதி ஆட்சி காலத்தில் நிறைவேற்றப்பட்ட திட்டங்கள் இன்று செயல்படுத்தப்பட்டு வருகிறது . மற்ற மாநிலங்களுக்கு வழிகாட்டியாக தளபதி தலைமையிலான அரசு செயல்பட்டது. கூட்டுறவுத் துறையில் மட்டும் ரூபாய் 20 ஆயிரம் கோடி கடன் தள்ளுபடி செய்யப் பட்டது . ரூபாய் 12,400 கோடி விவசாய கடன்கள்,ரூபாய் 5000 கோடி 5 பவுன் தங்க நகை அடகு வைத்ததற்கு கடன் தள்ளுபடி ,சுய மகளிர் குழுவுக்கு ரூபாய் 2500 கோடி கடன் ஆக மொத்தம் ரூபாய் 20 ஆயிரம் கோடி கடன்கள் தள்ளுபடி செய்யப் பட்டுள்ளது . இரண்டு மாதங்களில் த.வெ.க.அரசு தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்றி உள்ளதா என்றால் கேள்விக்குறியாக உள்ளது . அவர்கள் இரண்டு வாக்குறுதியை நிறைவேற்றியதாக கூறுகிறார்கள். 200 யூனிட் இலவசம் மின்சாரம் என்பது இன்று வெறும் அறிவிப்பாகவே உள்ளது. தற்பொழுது மக்கள் மின்சார கட்டணம் அதிகமாக செலுத்தி வருகிறார்கள் மின் தடையினால் மிகவும் பாதித்துள்ளார்கள். இதற்கு அரசிடமிருந்து எவ்வித பதிலும் இல்லை . இதே போல் அனைத்து விவசாயி களுக்கும் கடன் தள்ளுபடி செய்யப்படும் என்று விஜய் தேர்தலுக்கு முன் அறிவித்தார். இன்று ரூபாய் 75 ஆயிரம் வரை கடன் தள்ளுபடி என்று அறிவித்துள்ளார்கள். அதில் ஏகப்பட்ட குளறுபடிகள் உள்ளது . விவசாய கடன் தள்ளுபடி குறித்து தெளிவான அறிவிப்பு இல்லை. இதனால் தமிழகம் முழுவதும் கடந்த 15 தினங்களுக்கு மேலாக விவசாயிகள் போராடி வருகிறார்கள் .இந்த போராட்டத்தினை முதல்வர் விஜய் கண்டு கொள்ளவே இல்லை .இது ஒரு மக்களை ஏமாற்றும் அரசாக செயல்பட்டு வருகின்றது. கழக ஆட்சியில் 11.19 பொருளாதாரம் வளர்ச்சி இரட்டை இலக்கமாக இருந்தது . இதேபோல் தலைவர் தளபதி ஸ்டாலின் செய்த சாதனைகளை பிரதமர் மோடி தலைமையில் நடைபெற்ற நிதி ஆயோ க் கூட்டத்தில் நம்முடைய சாதனைகளை தான் அவர்கள் அரசு செய்த சாதனைகளாக முதல்வர் விஜய் எடுத்துக் கூறி பேசினார். எனவே நாம் இந்த தோல்வியை கண்டு துவண்டுவிட வேண்டாம். அடுத்து உள்ளாட்சி தேர்தல் நடைபெறுகிறது. தமிழகத்தில் விரைவில் தேர்தல் வரும் என்று பல்வேறு அரசியல் வல்லுனர்கள் கூறி வருகிறார்கள். நாம் அப்பொழுது ஒன்று சேர்ந்து ஒற்றுமையுடன் பணியாற்றி வெற்றி பெற்று நம்முடைய எதிரிகளுக்கு பாடம் புகட்ட வேண்டும். நாம் ஆட்சியில் இருந்தால் அடக்கி வாசிப்போம் . எதிர்க்கட்சியாக இருந்தால் அதிகம் பேசுவோம். மக்களின் உரிமைக்காக போராடுவோம். எனக்கு வாக்களித்த வாக்காளர்கள் , தேர்தல் பணியாற்றிய கூட்டணி கட்சி நிர்வாகிகள் கழகத் தொண்டர்கள் அனைவருக்கும் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். இவ்வாறு கே.ஆர்.பெரியகருப்பன் பேசினார்.

இந்த கூட்டத்தில் ஒன்றிய பொருளாளர் ஏ. எம். கண்ணன் நன்றி கூறினார் .

கூட்டத்தில் இளம் பேச்சாளர்கள் சுமித்ரா ,பார்கவி, முன்னாள் மாவட்ட கவுன்சிலர் ஏ.டி.என்.ரவி ஆகியோர் பேசினார்கள்.

இந்த கூட்டத்தில் ஒன்றிய, பேரூர் கழக நிர்வாகிகள், ராம ரவி, எஸ். திருநாவுக்கரசு, எஸ். பார்த்தசாரதி, ஏ.டி.என்.ஆர். தங்கமணி, எஸ்., பரமேஸ்வரி, மாவட்ட விளையாட்டு மேம்பாட்டுஅணி அமைப்பாளர் கே. எஸ். நாராயணன் மாவட்ட விவசாய அணி அமைப்பாளர் எஸ்.எஸ்.அருனாசலம், தகவல் தொழில்நுட்ப அணி துணை அமைப்பாளர் மெ. காளிமுத்து ,அயலக அணி சன்சீமான் சுப்பையா, பிள்ளையார்பட்டி சதீஷ்,பொறியாளர் அணி சுலைமான் பாதுஷா ,வர்த்தக அணி ருத்மா சரவணன், உதயம் சண்முகம், ஷாஜகான் இளைஞரணிவை கைமாறன், பஷிர் அகமது,மனோகரன், புதூர் கண்ணன், பூக்கடை பாண்டி, ஒன்றிய செயலாளர் கள் திருமலை முத்துராமலிங்கம், குன்னக்குடி சுப்பிரமணியன், ஒன்றிய துணை செயலாளர் எஸ்.முத்துகுமார், மு.பாண்டியன், செ.தமிழ் நம்பி, தொ.மு.ச.சண்முகநாதன், உட்பட ஒன்றிய பேரூர் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள்.